இந்த நன்மையை அடைய முடியாது. இந்தத் திட்டத்தை நிறை வேற்றுவதிலே தயக்கம் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. இதற்காக சென்னையில் ஒரு காரியாலயம் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே இதைத் துரிதமாக நிறைவேற்றுவதற்கு மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தூத்துக்குடித் திட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிற திட்டம். இதை மீன் பிடிப்புத் துறைமுகமாக ஆக்குவதா அல்லது ஆழ்கடல் துறைமுகமாக ஆக்குவதா என்பதுதான் இப்போதுள்ள பிரச்சினையாக இருக்கிறது. சேதுசமுத்திரத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அது முடிவடைந்த பிறகுதான் அதைப்பற்றிச் சொல்லமுடியும்.

திரு. கே. விநாயகம்: சேதுசமுத்திரத் திட்டத்தின் பலனாக தமிழகத்திற்கு நல்ல காரியங்கள் விளையும் என்று சொல்லும்போது அங்குள்ள மக்களுக்கு ஏதாவது பாதுகாப்பு தரவேண்டுமென்ற முறையில் சுவர் கட்ட வேண்டுமென்று சேர்த்துக்கொண்டால் அதற்காக எவ்வளவு அதிகமான பணம் செலவாகும்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பரிசீலனை முடிந்தால்தான் எவ்வளவு செலவாகும் என்று தெரியும்.

திரு. பெ. சௌந்திரபாண்டியன்: இந்த சேதுசமுத்திரத் திட்டத்தைப்பற்றி இலங்கை அரசு ஏதாவது ஆட்சேபணை தெரிவித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படி ஒன்றும் தகவல் இல்லை.

திரு. கே. பி. எஸ். மணி: இந்தத் தூத்துக்குடி, சேதுசமுத்திரத் திட்டங்கள் இரண்டையும் நிறைவேற்றுவதற்கு, இந்த ஆட்சிக் காலத்திலே நிறைவேற்றக்கூடாதென்ற உட்கருத்தைக் கொண்ட ஒரு சிலர் மத்திய சர்க்காரிலே இந்தக் காலத்திலேயே நிறை வேற்றப்படக் கூடாதென்ற சூழ்நிலையை அமைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கத் தமிழக அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படி யாராவது செய்தால் அந்த நல்லவர்கள் வாழ்க என்றுதான் வயிற்றெறிச்சலோடு சொல்ல வேண்டும்.

பஞ்சாயத்துத் தேர்தல்கள்

*179 வினா.—திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அவசர கால நிலையை உத்தேசித்து, முனிசிபல், பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் முதலிய ஸ்தல ஸ்தாபனங்களில்

காலியான மெம்பர் ஸ்தானங்களுக்கான உபத் தேர்தல்களை உடனடியாக நடத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) அவ்வாறு காலியாக உள்ள ஸ்தானங்கள் முறையே எத்தனை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) காலியான ஊராட்சி மன்ற ஸ்தானங்களுக்கு உடனடியாக தேர்தல் நடத்த 3—7—1967 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(இ) ஊராட்சி, நகராட்சி ஆகியவற்றில் காலியாக உள்ள இடங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது:—

ஊராட்சிகள்—1567.

நகராட்சிகள்—25

THIRU K. VINAYAKAM : In view of the impending elections to the municipal councils to be held next year, is it advisable that bye-elections should be held this year and will the Government think of the desirability of postponing the bye-elections till that date?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஊராட்சி மன்றங்களுக்கு மட்டுந்தான் தேர்தல் நடத்த உத்தரவிடப்பட்டிருக்கிறது நகராட்சி மன்றங்களுக்கு அவ்வாறு அறிவிக்கப்படவில்லை.

திரு. கே. பி. எஸ். மணி : இந்தத் தேர்தலைப்பற்றி கலெக்டர் அவர்களிடம் கேட்டதற்கு எமர்ஜென்சி காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது, இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்ற உத்தரவு வரவில்லை என்று சொன்னார்கள். அது சம்பந்தமாக கலெக்டருக்கு உத்தரவு அனுப்பப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : நான் ஏற்கனவே அறிவித்தபடி. 3—7—1967 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : இனி நடைபெற இருக்கும் நகர மன்றத் தேர்தல்களை கட்சி சார்பற்ற முறையில் நடத்த சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அது தனியாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று.

திரு. கரு. சீமைச்சாமி : நகராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு முன்னால் வார்டுகளைத் திருத்தியமைக்கவேண்டுமென்று பல நகராட்சிகளில் இருந்து தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். அந்தத் தீர்மானங்களின்படி வார்டுகள் திருத்தியமைக்கப்படுமா அல்லது பழையபடியேதான் இருக்குமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : வார்டுகளைத் திருத்தியமைக்கும் பணிகள் இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[1967 ஜூலை 6

நகர மன்றங்களில் தமிழில் நிர்வாகம்

*180 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நகராட்சி மன்றங்களில் தமிழில் நிர்வாகம் நடத்துவ தற்கான புதிய உத்திரவு ஏதேனும் பிறப்பிக்கப்பட்டு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) நகராட்சி மன்றங்கள் தமிழைத் தங்களது ஆட்சி மொழியாக மேற்கொள்வதற்குத் தாமே பொருத்தமான துணை விதிகளைத் தயாரித்துக் கொள்ளலாம் என்று அவைகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி மன்றங்கள் தமிழை ஆட்சி மொழியாக்குவதற்காக மாதிரித் துணை விதிகளும் அவைகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. மேற்படி மாதிரித் துணை விதிகளின் நகல் [a] ஒன்று சபை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. விநாயகம்: நகராட்சிகளில் எல்லாம் தமிழில் நடத்த வேண்டுமென்ற உத்தரவு இருந்தபோதிலும் இப்போதும் அங்கிருந்து வருகிற நோட்டீஸ்கள், டிமாண்ட் நோட்டீஸ் போன்றவை ஆங்கிலத்திலேதான் வருகின்றன என்பது அமைச்சருக்குத் தெரியுமா? இதைத் திருத்தியமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: சில குறிப்பிட்ட காரியங்களுக்கு மட்டும் ஆங்கிலத்தில் எழுதலாம் என்றும் மற்றவற்றுக்குத் தமிழைப் பயன்படுத்த வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது. இன்னும் சிலருக்கு ஆங்கில மோகம் இருப்பதால்தான் அப்படிப் பட்ட காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது படிப்படியாக நீக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. நா. காசிராமன்: நகராட்சிகள் தங்களது நிர்வாகத்தில் தமிழை உபயோகப்படுத்த வேண்டுமென்று எப்போது உத்தரவிடப் பட்டது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: 1958-லேயே இதுபற்றிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. படிப்படியாக சிலபல மாறுதல்களுக்கு ஏற்ப அவ்வப்போது உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டிருக்கின்றன.

திரு. முனு ஆதி: தலைவர் அவர்களே, இந்தச் சபையில் வைக்கப் பட்டிருக்கும் அறிக்கையில் சம்பளப் பட்டியல், பயணப் பட்டியல் ஆகியவற்றுக்கு ஆங்கிலத்தையே பயன்படுத்தலாம் என்று

---

a 217-ம் பக்கத்தில் I இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.